பக்கங்கள்: 10 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 12 வெள்ளிக்கிழமை 26.06.2020 கதிர் 101

## சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றிய 8 பேர் சிக்கினர்!

வவுனியா, ஜூன் 26

வவுனியா புளியங்குளம் காவல் துறை பிரிவிற்குட்பட்ட நொச்சிகுளம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி 30 மாடுகளை ஏற்றிச் சென்ற 8 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

2

# தமிழரசுவினால் திண்டாடும் மாவை மற்றக் கட்சிகளை ஒன்றிணைப்பாரா?

## கேள்வி எழுப்புகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



யாழ்ப்பாணம், ஜூன் 26

தனது தலைமையின் கீழ் இருக்கும் தமிழரசு வேட்பாளர்களையே இணக்கப்பாட்டுக்குக்கொண்டுவர முடியாத மாவை சேனாதிராசா எவ்வாறு ஏனையோரை இணைத்துக் கொள்ள முடியும் என கேள்வியெழுப்பியுள்ளார் சுரேஷ்பிரேமச்சந்திரன்.

இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் தொடர்பாகத்தான் கடும்கவலையடைந்திருக்கிறார் எனவும், தேர்தலுக்குப் பின்னர் அவர்களை மீளவும் இணைத்துக் கொள்ள முயற்சி செய்யப்போகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

கூட்டமைப்பை ஒருபுறம் வைத்துவிட்டு தமிழரசுக் கட்சியையே 2

## ஒருபோதுமே மண்டியிடோம்



கொழும்பு, ஜூன் 26

எங்களை அரசியல் ரீதியாக அநாதையாக மாற்றுவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் இந்த அரசால் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக நாங்கள் ஒருபோதும் மண்டியிடப்போவதில்லை என முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் பிரசாரமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எங்களை அரசியல் ரீதியாக அநாதையாக மாற்றுவதற்காக ஊடகங்களில் பிரசாரப் போரைத் தொடங்கியுள்ளனர்.

2

## அடிப்படைவாதிகள், இனவாதிகளான

# தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சியினரின் ஆதரவின்றி 'மொட்டு' ஆட்சி மலரவேண்டும்

## சிங்கள மக்களுக்குப் புதிய ஹெல உறுமய அறைகூவல்



**கொழும்பு, ஜூன் 26**

**நாட்டின் அடிப்படைவாதிகள், இனவாதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், முஸ்லிம் கட்சியினரின் ஆதரவு இல்லாமல் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடாளுமன்றத்தில் நிலையான அரசை ஸ்தாபிப்பதற்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.**

**- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் புதிய ஹெல உறுமய அமைப்பின் உப தலைவர் மதுமாதவ அரவிந்த.**

2

## ராஜிதவின் வெள்ளை வான் சாரதிகளுக்குப் பிடியாணை!

கொழும்பு, ஜூன் 26

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நடந்த சர்ச்சைக்குரிய வெளளை வான் ஊடகவியலாளர் சந்திப்பு சம்பவத்தின் சந் தேகநபர்களான சரத் குமார மற்றும் அதுல சஞ்சீவ மதநாயக்க ஆகியோரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாதமையால் அவர்களுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சஜித்தின் பிரதமர் கனவு ஒகஸ்ட் 6 இல் கலையும்!

### எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பறிபோகும் என்கிறார் பிரசன்ன

கொழும்பு, ஜூன் 26

சஜித் பிரேமதாஸவின் ஜனாதிபதிக் கனவு கலைந்தது போல் பொதுத்தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் கனவும் கலைந்துவிடும். அத்துடன் ஒகஸ்ட் 6ஆம் திகதியாகும் போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமல்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 2

## முன்னாள் போராளிகள் மீது புலனாய்வாளர்கள் இலக்கு!

### முன்னாள் எம்.பி. சார்ள்ஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 26

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு அரச புலனாய்வாளர்கள் வன்னியில் முன்னாள் போராளிகளின் வீடுகளுக்கு அடிக்கடி செல்கின்றனர். முன்னாள் போராளிகள் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் புலனாய்வாளர்களிடம் தெரிவித்துவிட்டுச் செல்ல வேண்டும் என அவர்கள் கூறி வருகின்றனர். அரச புலனாய்வாளர்களின் இந்த அச்சுறுத்தல் குறித்து முன்னாள் போராளிகள் பலர் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட 2

மளிகைப் பொருள்கள் உங்கள் வீடு நோக்கி...!



யாழ் நகரில்

Semba STORE இன் விநியோக சேவை





077 411 4422

Payment method - cash on delivery

## தமிழ்க் கூட்டமைப்பு, ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் காரியாலத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வப் பெற்றுக்கொடுப்பதாக அஷ்மையும். சிங்களத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும்என்ற நோக்கம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் ஊடாக நிறைவேறியுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் ஆதரவு வழங்கவில்லை. இருப்பினும் ஜனாதிபதி அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகச் செயற்படுகின்றார்.

அடிப்படைவாதிகளும், இனவாதிகளுமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரநிதிகள் கடந்த அரசில் அதிகாரம் செலுத்தினார்கள். ஒரு தரப்பினரது சுயநல செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த மக்களும் கடந்த காலங்களில் பல நெருக்கடிக்குள்ளானார்கள். இவ்வாறான நிலை இனிவரும் காலங்களில் ஏற்படக் கூடாது.

நாட்டைப் பிரிக்கும் எண்ணம் கொண்டவர்களும், அடிப்படைவாதப் போக்கை உடையவர்களும் புதிய அரசில் ஆதிக்கம் செலுத்தகேகூடாது. ஆகவே, இனவாதிகளின் ஆதரவு இல்லாமல் நாடாளுமன்றத்தில் நிலையான அரசை ஸ்தாபிப்பதற்குப் பெரும்பாலான மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கருணா அம்மான் குறிப்பிட்ட கருத்து முற்றிலும் தவறானது. இராணுவத்தினரினது உறவுகளின் உணர்வுகளை அவர் மீண்டும் நகைப்புக்குள்ளாக்கியுள்ளார். இவ்வாறான கருத்துக்களை இனி அவர் குறிப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியமைக்கு இராணுவத்தினர் மாத்திரமே பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும்.

பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை தொடர்பில் தன்னிடம் குரல் பதிவு உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு குரல் பதிவுகள் இருக்குமானால் அவற்றைபி பகிரங்கப்படுத்த வேண்டும். மதத் தலைவர்களை அவமதிக்கும் விதத்தில் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுப்பதை அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் – என்றார்.

## தமிழரசுவினால் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் தான் இன்று மாவை சேனாதிராசா இருக்கின்றார். இவர்களது வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் பேச முடியாதளவுக்கு கன்னை பிரிந்து நிற்கின்றனர். சுமந்தினும், சிறீதரனும் தமிழர் வாக்குகளைச் சுருட்டிக்கொள்ளக் கூட்டு, இவர்களுக்கும் சரவணபவானுக்கும் எந்தப் பேச்சுமில்லை.

கட்சியின் தலைவர் மாவையும், கட்சியின் பேச்சாளர் சுமந்திரனும் ஒடும் புளியம்பழமும் போல ஒட்டிக் கொள்ளாமலே இருக்கின்றனர். தமிழரசுக் கட்சிக்குள் கூட்டுச் சேர்க்க ஆள்களில்லாமல் மாவை புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தனுடன் கூட்டுச் சேர்ந்து தனது வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றார்.

அது மாத்திரமல்ல தமிழரசுக் கட்சிக்குள் தனது தலைமையைத் தக்க வைத்துக்கொள்வதிலேயே பாரிய சவால்களை எதிர்கொள்ளும் மாவை தேர்தல் வருகின்றதென்று தெரிந்தவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்றவர்களுக்காக வருத்தப்படுவது என்பது பெரும் நாடகமாகவே தோன்றுகின்றது.

கூட்டமைபிற்கென ஒரு யாப்பை உருவாக்கி அதனைப் பதிவு செய்து ஓர் பொதுச்சின்னத்தைப் பெற்றால் தமிழரசுக்கட்சி அழிந்து விடும் என நகைப்புக்கிடமான கருத்தைக் கூறி பதிவு செய்வதை மறுதலித்து வருபவர் எவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை ஒன்றிணைக்க முடியும்?

தமிழரசுக் கட்சியினதும், அவர்கள் இணைந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளும் தமிழ் மக்களை வெறுப்படைய வைத்துள்ளன. இவர்களது கடந்தகால நடவடிக்கைகள் அரசாங்கத்தைப் பாதுகாக்க உதவியதே தவிர, இவர்களால் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியவில்லை.

இதன் காரணமாகத்தான் புதிய சிந்தனையுடனும், புதிய அணுகுமுறையுடனும் விக்னேஸ்வரன் தலைமையில் ‘தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி’ என்ற புதிய கூட்டணி உருவாகியுள்ளது. மக்கள் முழுமையாகவே ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து நிற்கின்றனர். அம்மாற்றம் உருவாகியதும் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க அதில் ஆர்வமும் ஈடுபாடும் உள்ள அனைவரையும் ஒன்றிணைப்போம். அப்போது தமிழரசுக் கட்சியுடனும் பேசுவோம். இப்போதைக்கு, தமிழரசுக் கட்சியை சீர்படுத்த முடியுமா என்பதை மாவை அண்ணை சிந்திக்கட்டும் – என்றுள்ளது.

## சட்டவிரோதமாக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சிகுளம் பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அந்த வீதியால் வருகை தந்த நான்கு வாகனங்களை வழிமறித்துச் சோதனைசெய்தனர்.

இதன்போது அந்த வாகனங்களில் 30 மாடுகள் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

வாகனத்தில் பயணித்த அனுராதபுரத்தைச் சேர்ந்த 8 பேரைக் கைது செய்த பொலிஸார், வாகனங்களையும், மாடுகளையும் புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

கைப்பற்றப்பட்ட மாடுகள் மருதோடை பகுதியிலிருந்து அனுராதபுரம் நோக்கி கொண்டு செல்லப்படவிருந்தமையுடன் அவற்றை எடுத்துச் செல்லவதற்கான அனுமதிப்பத்திரம் அவர்களிடம் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

## ஒருபோதுமே ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எங்களை எந்தவொரு நடவடிக்கைகளாலும் தடுக்க முடியாது என்பதை ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் மஹிந்தவுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எனவே நீங்கள் எங்களை தோற்கடிக்க விரும்பினால், நாட்டை திறமையாகவும், நேர்மையாகவும், ஊழல் இல்லாமலும் ஆட்சி செய்யுங்கள் – என்றார்.

# ரிஷாத்தின் சகோதரர் சாட்சியமளிப்பதற்கு அனுமதி கோரி ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சட்டத்தரணி மூலம் கடிதம்!

(அஸீம் கிலாப்தீன்)

பயங்கரவாதி சஹ்ரான் தப்பித்துச் செல்வதற்குத் தாம் உதவினார் எனப் பாதுகாப்புத் துறையின் முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் தமக்கு எதிராக அளித்த கருத்துத் தொடர்பில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியமளித்து உண்மையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குமாறு, தனது சட்டத்தரணி சாஹா சம்ஸ் ஊடாக, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், ஆணைக் குழுவின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ரிப்கான் பதியுதீனின் சார்பில் அவரின் சட்டத்தரணி அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

புலனாய்வுத்துறை முன்னாள் பணிப்பாளர் ஒருவர், ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு வழங்கிய சாட்சியங்களால், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரரான எனது சேவையாளர் ரிப்கான் பதியுதீன், கடுமையான அபகீர்த்திக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் எனவும், குறிப்பிட்ட அதிகாரி வெளிப்படுத்திய கருத்துக்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களிலும், சமூகவலைத் தளங்களிலும் பெரும் பிரசித்தப்படுத்தப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டமை தொடர்பிலும் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த பயங்கரவாதி சஹ்ரான், 2018 ஆம் ஆண்டு, நாட்டைவிட்டு தப்பிச்செல்ல, மன்னார் படகுத்துறையில் படகு வழங்கினார் என முன்னாள் புலனாய்வுத் துறைப் பணிப்பாளர் தெரிவித்திருந்தமையை எனது சேவையாளர் முற்றிலும் மறுக்கின்றார். அவ்வாறு சாட்சியமளித்தவரின் அடிப்படையற்ற கருத்துக்களினால், எனது சேவையாளரான ரிப்கான் பதியுதீனின் நற்பெயர் பாதிக்கப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனது சேவையாளரின் உண்மையான நிலைப்பாட்டினை வெளிப்படுத்துவதற்கும், அவரது கருத்தினை பெற்றுக் கொள்வதற்கும் வசதியாக ஜனாதிபதி ஆணைக்குழு, அவர் சாட்சியமளிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். – இவ்வாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையைச் சார்ந்த முன்னாள் பணிப்பாளர் ஒருவர், நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்துள்ள இந்த ஆணைக்குழுவில், இவ்வாறான ஆதாரமற்ற கருத்துக்களை சுமத்துவது, இந்த விடயத்தில் எந்தவிதமான தொடர்புமே இல்லாத ரிப்கான் பதியுதீனை மோசமாக பாதித்துள்ளதாகவும், அவரது சட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த பொறுப்பற்ற கருத்துக்கு எதிராக, தனது சேவையாளரின் உண்மை நிலைப்பாட்டை பெற்றுக்கொள்ள, அவருக்குக் கால அவகாசம் வழங்குவது பக்கச்சார்பற்ற விசாரணைக்கு உதவும் எனவும் சட்டத்தரணி, ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்..

## முன்னாள் போராளிகள் மீது ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு – குமுழமுனைப் பகுதியில் இன்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியன்று மைத்திரிபால சிறிசேன மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பதவியை வழங்கினார். ஆனால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்கள் பெற முடியாமல் போனது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழப்ப நிலைகள், தமிழ் மக்களுடைய அபிப்பிராயம் ஆகியவற்றுக்கு அமைவாக 33 நாள்களுக்குப் பின்னரே ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கினோம்.

எங்களுடைய மக்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் தான் உங்களுக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்று அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இது தொடர்பில் விளக்கமாக எடுத்துக்கூறியிருந்தோம்.

அவ்வாறான ஒருவருக்கு நீங்கள் பிரதமர் பதவியைக் கொடுத்துள்ளீர்கள். எனவே, உங்களுக்கு நாம் ஆதரவளிக்க முடியாது என்பதையும் விளக்கமாகக் கூறினோம்.

தற்போது கடந்த 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு முன்னாள் போராளிகள் பலர் பயந்த நிலையிலேயே தமது வாழ்க்கையை நடத்துகின்றார்கள்.

என்னிடம் பல முன்னாள் போராளிகள் தாம் தற்போது எதர்கொள்ளும் பல்வேறு இடர்பாடுகளை என்னிடம் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு அரச புலனாய்வாளர்கள் முன்னாள் போராளிகளின் வீடுகளுக்கு அடிக்கடி செல்கின்றனர். முன்னாள் போராளிகள் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் புலனாய்வாளர்களிடம் தெரிவித்துவிட்டுச் செல்ல வேண்டும் என அவர்கள் கூறி வருகின்றனர். இது தொடர்பில் முன்னாள் போராளிகள் பலர் என்னிடம் முறையிட்டுள்ளனர். இவ்வாறாக கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிற்பாடு ஓர் இறுக்கமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது – என்றார்.

## சஜித்தின் பிரதமர் கனவு ........................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மினுவாங்கொடைப் பிரதேசத்தில் இன்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: –

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சி பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது. எனினும், மக்கள் ஒருபோதும் இவர்களின் பொய்ப் பிரசாரங்களை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நிலையிலே இந்த அரசை நாங்கள் பொறுப்பேற்றோம். வீழ்ச்சியுற்றிருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ– பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் இணைப்பின் மூலம் மாத்திரமே முடியும். அதனால் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாட்டின் பிரதமராகுவது மஹிந்த ராஜபக்ஷவார் என்ப தில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், பொதுத்தேர்தலில் சஜித் பிரேமதாஸ பிரதமராகுவார் எனச் சிலர் தெரிவித்து வருவதை நான் காண்கின்றேன். சஜித் பிரேதமதாஸவின் முதலாவது கனவு ஜனாதிபதிப் பதவி. இரண்டாவது கனவு பிரதமர் பதவி. அவரின் ஜனாதிபதிக் கனவு கலைந்துவிட்டது. பொதுத்தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் கனவும் கலைந்துவிடும். அதேபோன்று ஆகஸ்ட் 6ஆம் திகதியாகும்போது அவரின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமல் போகும் நிலையே இருந்து வருகின்றது.

நாட்டில் ஜனாதிபதி ஒரு கட்சியிலும் பிரதமர் வேறு கட்சியிலும் இருந்ததன் மூலம் இந்த நாடு சீரழிந்ததை மக்கள் மறந்துவிடவில்லை. அவ்வாறான அரசு ஒன்றை அமைக்க மக்கள் தயாரில்லை. அதனால் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று நிலையான அரசு ஒன்றை நாங்கள் அமைப்போம். அதன் மூலம் நல்லாட்சி அரசால் சீரழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம்.

எனவே, முடியாது என்ற 30 வருட காலப் போரை வெற்றிகொண்டோம். முழு உலகமும் அச்சத்தில் இருந்த கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்திய கோட்டாபய – மஹிந்த இணைப்பின் மூலம் அல்லாமல் வேறு யாருக்கும் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

அதனால் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு தேர்தலில் வாக்களிக்க வேண்டும் – என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சாத்தியமற்ற பேச்சு

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் நியாயமான ஒரு கேள்வியை எழுப்பியிருக்கின்றார்.

*'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போவேன் என்றானாம்'* என்ற தொனியில் அவர் கேள்வி அமைந்துள்ளது.

"தனது தலைமையின் கீழ் இருக்கும் தமிழரசு வேட்பாளர்களையே இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வர முடியாத மாவை சேனாதிராசா எவ்வாறு ஏனையோரை அணைத்துக் கொள்ள முடியும்?" - இவ்வாறு சுரேஷ் பிறேமச்சந்திரன் எழுப்பும் கேள்வியில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

மாவை சேனாதிராசா தலைமையிலான தமிழரசுக் கட்சியின் நிலைமை இன்று சந்தி சிரிக்கின்றது.

தமிழ் மக்கள் வேறு காத்திரமான மாற்று சக்தி இல்லை என்ற கையறு நிலையில் 'மாவை அண்ட கோ'வுக்கு வாக்குப் போட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனரே தவிர, வேறு தகுதியான காரணம் எதனையும் தனது கட்சிக்கு மாவையரும் அவரது விதூஷகக் குழுவினரும் தேடியே வைக்கவில்லை என்பதுதான் உண்மை.

நாம் இப்பத்தியில் ஆரம்பம் முதல் கட்டிக் காட்டி வருகின்றமை மாதிரி, தம்மைத் தாமே வேட்பாளராகத் தெரிவு செய்யும் கண்துடைப்பு நாடகத்துடன்தான் 'மாவை அண்ட் கோ' வின் தேர்தல் பித்தலாட்டம் தொடங்குகின்றது.

வேட்பாளர் தெரிவுக் குழுவில் இருப்போரே வேட்பாளர்களாகவும் தெரிவு செய்யப்படும் அவலத்தில் தொடக்குகின்றது மாவையர் கட்சியின் குழப்பம்.

தமிழரசுக் கட்சியின் பெயரில் இம்முறையும் களத்தில் இறங்கியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேர்தல் போட்டியும், களமோதலும், முரண்பாடுகளும் பிற கட்சிகள், தரப்புகள், சுயேச்சைக் குழுக்களோடு அல்ல. முதலில் உள்கட்சிக்குள்தான் குத்துவெட்டு, முரண்பாடு, கழுத்தறுப்பு, கால் வாரல் எல்லாம்.

வேட்பாளர்கள் ஆளாளுக்குக் காலை வாருகின்றனர் என்றால் அதில் கன்னை கட்டி, முன்னணியில் நின்று மோதுபவரே மாவையர்தான்.

தன்னுடைய சொந்தக் கட்சியில் தன்னுடன் கூட்டுச் சேர ஆளில்லாமல் கூட்டுக் கட்சியான புளொட்டின் வேட்பாளர்களாகிய சித்தார்த்தன் மற்றும் கஜதீபனுடன் கழுத்தில் ஏறிப்பயணிக்க வேண்டிய நெருக்கடியில் கட்சித் தலைவர் மாவை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

தமது தமிழரசுக் கட்சிக்குள்ளேயே தமது நிலையை உறுதிப்படுத்துவதற்கு பெரும் சவால்களையும் நெருக்கடியையும் எதிர்கொள்வதற்குத் தடுமாறி நிற்கும் மாவை சேனாதிராசா, தமிழ்க் கூட்டமைப்புக்கு வெளியே நிற்போரை இணைத்துக் கொள்ளப் போகின்றார் என்று கூறுவது பெரும் வேடிக்கை என சுரேஷ் பிறேமச்சந்திரன் குறிப்பிடுவதில் அர்த்தம் இருக்கவே செய்கின்றது.

பலரையும் அரவணைத்து ஒரு கட்டமைப்பை வலுப்படுத்துவதாயின் அதற்கு இரண்டு விடயங்கள் முக்கியமாக அவசியமானவை.

ஒன்று - விட்டுக்கொடுப்பும் அரவணைப்பும்.

அடுத்தது - சுயநலமற்ற தியாகம்.

இந்த இரண்டு விடயத்திலும் வேடதாரிகளாக நடந்து கொள்பவர்கள் பல தரப்புகளையும் இணைத்து, ஐக்கியத்தை ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறுவதும் கூட அந்த வேடதாரி நடிப்பின் அங்கங்கள்தாம்.

உண்மையில் தமிழர் தரப்புகளை ஒன்றுபடுத்த வேண்டும், அத்தரப்புகள் ஒன்றுபடாமல் இருப்பது தமிழரின் பேரவல நிலைக்குக் காரணம் என்று மாவை சேனாதிராசா கவலைப்படுவாராயின் - வேதனைப்படுவாராயின் -

தமிழர் தரப்பை அதிலிருந்து மீட்பதற்கான யதார்த்த பூர்வமான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும் என்ற கவலை அவருக்கு இருக்குமாயின் -

அதை வெளிப்படுத்துவதற்கு அவர் விட்டுக் கொடுப்புடன், சுயநலம் கடந்து, தாராள மனதுடன் தயாராக இருக்கின்றார் என்பதைக் காட்ட வேண்டும்.

பதவி ஆசை துறந்து, குறைந்தபட்சம் விருப்பு வாக்குக்காக உள்குத்துவெட்டில் சம்பந்தமேபடாமல் ஒதுங்கி, வெளியில் இருப்போரை அரவணைத்து, உள்வாங்குவதற்காக உச்ச விட்டுக் கொடுப்பைப் பிரதிபலித்து அவர் நடக்க வேண்டும்.

எம்.பி.பதவிக்காக சகவேட்பாளர்களோடே சரிசமமாக உள்குத்து வெட்டுச் சமரில் மும்முரமாக நிற்கும் மாவையினால் அப்படி முன்மாதிரியாக நடக்க முடியாது.

அப்படியானவர், வெளியில் இருப்போரையும் கூட்டமைப்புடன் அரவணைத்து, அரசியல் செய்ய வேண்டும் என்று சொல்வது, கூரை ஏறமுடியாதவன், வானம் ஏறி வைகுந்தம் போகும் கதை போன்றதுதான்.

# இதை விடக் கொடூரமாக நாளைய ஆட்சி இருக்கும்

## எச்சரிக்கின்றார் ஜே.வி.பியின் சந்திரசேகரன்




இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் ஆட்சியே தற்போது நடைபெற்று வருகின்றது எனவும், நாளைய ஆட்சி இதைவிட மிக கொடூரமானதாக இருக்கும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளருமான இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அராஜகத்தில் பயணிக்கும் அரசாங்கத்தை எதிர்க்க வலுவான எதிர்க்கட்சி தேவையாகவுள்ள அதேவேளை முதுகெலும்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவை என இ.சந்திரசேகரன் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இ.சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பொது தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தீர்மானிக்கும் சக்தியாக உருவாகுவோம். அதற்கு யாழ்ப்பாண மக்களும் எமக்கு உறுதுணையாக இருப்பார்கள் என நம்புகின்றோம்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த எமது வேட்பாளர்கள் யாழ்ப்பாண மக்களுக்காக குரல் கொடுக்க கூடியவர்கள். மற்ற கட்சிகள் போன்று பணத்திற்காகவும் , பதவிக்காகவும் போட்டியிடவில்லை. தொண்டர் அடிப்படையில் மக்களுக்காக சேவை செய்ய கூடியவர்கள்.

கொரோனா பாதிப்பு இன்னமும் நீங்கவில்லை. 46 இலட்சத்திற்கு அதிகமான மாணவர்கள் இன்று கல்வி நடவடிக்கை இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர தனியார் நிறுவனத்தை சேர்ந்தவர்கள், விவசாயிகள் எனப் பலரும் வருமானங்களைஇழந்துநிர்க்கதியாகிஉள்ளனர்.

நாடு முழுவதும் கொரோனோவால் மக்கள் அனைவரும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நேரத்தில் சுகாதார துறையினர், வைத்தியர்கள் , தாதியர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனால் இந்த அரசாங்கம் கொரோனோவை காரணமாக வைத்து மக்களை மிக மோசமாக வதைக்கும் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் ஆட்சியே தற்போது நடைபெற்று வருகின்றது. நாளைய ஆட்சி இதைவிட மிக கொடூரமானதாக இருக்கும்.

அராஜகத்தில் பயணிக்கும் அரசாங்கத்தை எதிர்க்க வலுவான எதிர்க்கட்சி தேவை. அதே வேளை முதுகெலும்புள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவை.

கொரோனாவுக்கு முதல் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

தோட்ட தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் முதலாம் திகதி 1000 ரூபாய் சம்பளம் வழங்குவோம் என்றார்கள், விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்குவதாக வாக்குறுதி அளித்தார்கள். அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கவில்லை. இவ்வாறாக வழங்கிய வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டுள்ளனர்.

ஆனால் நாட்டினை கடன் சுமைக்குள் தள்ளியுள்ளனர். 13 ரில்லியன் கடன் உள்ளது. ஆனால் நாட்டின் சொத்து மதிப்பு 1.6 ரில்லியனே. அப்படியாயின் மிச்சமெல்லாம் தண்ணியில் அடித்து செல்லப்பட்டுள்ளனவா?

பிறக்கப்போற பிள்ளைகளே 6 இலட்சம் கடன்கார பிள்ளையாகவே பிறக்கின்றது. ஆனால் ஆள்பவர்கள் தங்களை குபேரன்களாக ஆக்கிக் கொண்டனர்.

இதனால் தான் நாட்டில் ஏதாவது , அசம்பாவிதம் நடந்தால் நாடாளுமன்றில் நடக்காதா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

நாட்டில் குண்டு வெடித்த போது , நாடாளுமன்றில் வெடிக்கலையே , கொரோனா வந்த போது நாடாளுமன்றத்தில் இருப்பவர்களுக்கு வரவில்லையே , வெள்ள பெருக்கு வந்த போது நாடாளுமன்றை அடித்துச் செல்லவில்லையே என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

நாடாளுமன்றில் உள்ளவர்களில் 100 பேர் மதுபானசாலைக்கான அனுமதி பெற்றுள்ளனர், எதனோல் வியாபாரிகள் அங்குதான் இருக்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் இருப்பதனால் மக்கள் அவ்வாறு அங்கலாய்ப்பதில் தவறில்லை.

நாட்டில் தொடர்ந்து மேட்டுக்குடியினரே நாட்டை ஆண்டுவருகின்றனர். அவர்கள் மக்களின் வறுமை , கஷ்டங்களை புரிந்து கொள்ளப்போவதில்லை. எம்மை தொடர்ந்து வஞ்சித்தே வருகின்றனர்.

இதனால்தான் நாட்டில் இருந்து இளையோர் பலர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். சுயநிர்ணய உரிமைக்காக போராடியவர்கள் இன்று உரிமைகளை கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். சுயத்தை இழந்து நிற்கிறோம்.

ராஜபக்ஷக்கள் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யப்போவதில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தை தொடர்ந்து வளர்க்கவே முயல்வார்கள். இதனை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு ராஜபக்ஷக்களைப் புறக்கணிக்க வேண்டும்.

தாமே தேச பற்றாளர்கள் என கூறும் ராஜபக்ஷக்கள் இன்று 3 ஆயிரம் இராணுவத்தை கொன்றேன் என்பவரை வெளியே விட்டுள்ளார்கள். ஆனால் பல அரசியல் கைதிகளை விடுவிக்கத் தயாராகவில்லை.

3ஆயிரம் இராணுவத்தை கொன்றேன் என கருணா கூறியதை போல வேறு ஒருவர் கூறியிருந்தால் அவரின் நிலைமை என்ன என்று சிந்தித்துக்கொள்ளுங்கள்.

கிழக்குச் செயலணி கூட சிங்கள மக்களுக்கு இனவாதமூட்டி அவர்களை உசுப்பு வதன் மூலம் சிங்கள மக்களின் வாக்குகளை பெறவே அமைக்கப்பட்டது. – எனத் தெரிவித்துள்ளார்.

# களுத்துறை மேயர் கைது

கொழும்பு, ஜூன் 26

களுத்துறை மாநகர சபை மேயர் அமீர் நசீர், களுத்துறை தெற்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பிரதேசத்தில் மூடப்பட்டிருந்தமைதானம் ஒன்றின் பூட்டை உடைத்து திறந்தமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாநகர சபையின் எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.ஏ.டி. நிலந்த என்பவரையும் தாம் இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 23 ஆம் திகதி இவர்கள் இருவர் உட்பட 12 பேர் மைதானத்துக்குள் அனுமதியின்றிச் சென்றுள்ளனர்.

# எல்லை மோதலுக்குச் சீனாவே காரணம் இந்திய வெளியுறவுத் துறை குற்றச்சாட்டு



இந்தியா - சீனா எல்லையில் இரண்டு நாடுகளும் தத்தமது படைகளைக் குவித்து வருவதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சீனச் சிப்பாய்களின் அத்துமீறலால் தான் லடாக் எல்லையில் பதற்றம் நீடிக்கிறது. எல்லையில் இந்தியச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் நடந்த மோதலுக்குச் சீனாவே காரணம். இரு நாடுகளிடையே கையெழுத்தான அனைத்து ஒப்பந்தங்களையும் சீனா மீறியுள்ளது என்று இந்தியா வின் மத்திய வெளியுறவுத் துறை குற்றம் சாட்டியுள்ளது.

எல்லை மோதலுக்கு இந்தியச் சிப்பாய்களே காரணம் என்று முன்னதாகச் சீனா குற்றம் சாட்டியிருந்த நிலையில் இந்தியத் தரப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய வெளியுற வுத் துறை செய்தித்தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவா மேலும் கூறியதாவது:

லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கு இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்தப் பகுதியில் பல ஆண்டுகளாக இந்தியச் சிப்பாய்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

மே மாதத் தொடக்கத்தில் கிழக்கு லடாக் பகுதிகளில் சீனச் சிப்பாய்கள் அத்துமீறி நுழைய முயன்றனர். இரு நாடுகளிடையே கையெழுத்தான அனைத்து ஒப்பந்தங்களையும் மீறும் வகையில் சீனச் சிப்பாய்கள் செயற்பட்டனர். இருதரப்பு மோதலுக்கு சீனாவே காரணம். இந்திய தரப்பில் எல்லைக்கோட்டை மாற்ற முயற்சி செய்யவில்லை. ஆனால், சீன தரப்பு தொடர்ந்து ஒருதலைபட்சமாகச் செயற்படுகிறது. எல்லைக்கோட்டை மாற்ற முயற்சி செய்து வருகிறது என்றார்.

## இந்தியச் சிப்பாய்களே மோதலுக்குக் காரணம் சீனா மறுபடியும் இடித்துரைப்பு

இந்திய - சீனா எல்லையில் இரண்டு நாடுகளும் தத்தமது படைகளைக் குவித்து வருவதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சீனச் சிப்பாய்களின் அத்துமீறலால் தான் லடாக் எல்லையில் பதற்றம் நீடிக்கிறது. எல்லையில் இந்தியச் சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவா தெரிவித்திருக்கும் நிலையில் சீனா தரப்பில் தவறு எதுவும் இல்லை, இந்தியாதான் கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டிச் சீனப்படைகள் மீது தாக்குதல் நடத்தியது என்று இந்தியாவுக்கான சீனத் தூதரக அதிகாரி சன் வெய்டாங் தெரிவித்தார்.

எல்லையில் பதற்றத்தைத் தணிப்பதற்கு இரண்டு நாட்டு இராணுவ உயரதிகாரிகள் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையே, எல்லையில் இரு நாடுகளும் படைகளைக் குவித்து வருவதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தியாவுக்கான சீனத் தூதரக அதிகாரி சன் வெய்டாங் பதற்றத்தைக் குறைக்கும் பொறுப்பு இந்தியாவுக்குத்தான் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

எல்லையில் மோதலைத் தவிர்க்க இந்தியாவுடன் சுமுகமான பேச்சுக்குச் சீனா தயாராகவே உள்ளது, ஆனால், 'சந்தேகமும் உரசல்' போக்குகளும் தவறான பாதையில் செல்வதாகவே முடியும். இந்தப் பாதை இருநாட்டு மக்களின் அடிப்படை எண்ணங்களுக்கு எதிரானதாக அமையும் என்று தெரிவித்தார். எல்லைச் சூழ்நிலையைச் சிக்கலாக்கும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இந்தியா சீனாவைப் பேச்சுகள் மூலம் சந்தித்தால் எல்லையில் அமைதியை உருவாக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இப்போதைக்கு இருதரப்பு எல்லைப்பகுதியும்; கட்டுப்படுத் தக்கூடிய நிலையில் உள்ளன. சீனா தரப்பில் எது வும் இல்லை, இந்தியாதான் எல்.ஏ.சி என்ற கட்டுப்பாட்டு எல்லையைக் கடந்தது. எங்களைத் தூண் டியது சீனப்படைகள் மீது தாக்குதல் நடத்தியது. இந்தியப் படைகள் இருநாடுகளுக்கும் இடையே உள்ள ஒப்பந்தங்களை மீறின - என்றார்.

## மின்னல் கோரத்தாண்டவம் 107 பேர் பரிதாபகரச் சாவு



இந்தியாவின் பிகார் மாநிலத்தில் மின்னல்தாக்கி 83 பேரும், உத்தரப் பிரதேசத்தில் 24 பேரும் உயிரிழந்தனர். பிகாரில் அதிகபட்சமாக கோபால்கஞ் என்னும் மாவட்டத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

அந்த மாநிலம் முழுவதும் 23 மாவட்டங்களில் உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளன. பிகாரைத் தொடர்ந்து உத்தரப் பிரதேச மாநிலத்திலும் மின்னல்தாக்கி சிலர் உயிரிழந்தனர். பல மாவட்டங்களில் மின்னலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் இன்னும் சேதங்கள் அதிகமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஜூன் மாதம் 22ஆம் திகதியன்று கடும் மழை காரணமாகப் பிகார் மற்றும் அசாம் மாநிலங்களில் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையகம் தெரிவித்திருந்த நிலையில் மின்னல் தாக்கம் நிகழ்ந்துள்ளது.

எனினும் அடுத்த சில தினங்களுக்கு வானிலை மோசமாக இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. அத்தோடு இன்னும் மூன்று நாள்களுக்கு அங்கு கடும் மழை பொழியலாம் என்று வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பிகாரில் பெய்து வரும் மழையால் பல இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது.

போக்குவரத்துமற்றும்மின்சாரம்தடைப்பட்டுள்ளன, நதிகளில் நீரோட்டம் அதிகரித்துள்ளது. அத்தோடு உத்தரப் பிரதேசத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. பல இடங்களில் கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உத்தரப் பிரதேசத்தில் அதிக பட்சமாக டியோரா எனும் நகரில் பலர் உயிரிழந்துள்ளனர்.

**மோடி துயர் தெரிவிப்பு**

'பிகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் சில மாவட்டங்களில் பலத்த மழை மற்றும் மின்னலால் பலர் உயிரிழந்துள்ளனர் என்ற துயர்மிகு செய்தி கேட்டேன். மாநில அரசுகள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பேரழிவில் தங்களின் அன்புக்குரியோரை இழந்த குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களுக்கு 4 லட்சம் ரூபா (இந்திய மதிப்பில்) நிவாரண உதவியாக வழங்கப்படும் என பிகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் தெரிவித்தார்.

**தந்தை, மகன் சாவு விவகாரம்**

## மிகக் கவனத்துடன் விசாரியுங்கள் பொலிஸாருக்கு புது அறிவுறுத்தல்

சாத்தான் குளத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தந்தையும் மகனும் அடுத்தடுத்து உயிரிழந்துள்ள நிலையில், கைதிகளை விசாரிக்கும்போது எச்சரிக்கை தேவை என்று அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் உயரதிகாரி ஜே.கே.திரிபாதி சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அந்தச் சுற்றறிக்கையில், கொரோனா பரவலைத் தடுப்பதற்காகக் கைது செய்யப்படும் நபர்களைப் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லாமல், வெறுமையான கட்டடங்களை தெரிவு செய்து அடைத்து வைக்க வேண்டும். அவர்களுடன் எந்தவித நேரடித் தொடர்பையும் பொலிஸார் வைத்துக் கொள்ளக் கூடாது. விசாரணைக் கைதிகளை விசாரிக்கும்போது சட்டவிதிகளின்படி எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## சசிகலா விடுதலை? பரபரப்புத் தகவல்



மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில், அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவரும் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.

தண்டனைக் காலம் முடியும் முன்பாகவே சசிகலா விடுதலை செய்யப்படுவார் என அவருக்கு நெருக்கமான வட்டாரத்தினர் கூறி வருகின்றனர். இந்த நிலையில், வட்ஸ் அப், முகநூல் உள்ளிட்ட சமூக வலைதளங்களில், 'சுதந்திர தினத்தையொட்டி வரும் ஆகஸ்ட் 14ஆம் திகதி சசிகலா விடுதலை செய்யப்படுவார்' எனத் தகவல்கள் பரவின. இதுகுறித்து பரப்பன அக்ரஹாரா சிறைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, சசிகலாவின் விடுதலை தொடர்பான தகவல் தவறானது. என்றனர்.



## தமிழக மீனவர்களை மீட்க ஈரானுக்கு விரைந்தது கப்பல்

கொரோனா ஊரடங்கால் ஈரானில் சிக்கிய தமிழக மீனவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்காக இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். ஜலஷ்வா என்ற கப்பல் ஈரான் நாட்டில் உள்ள பந்தர் அப்பாஸ் துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளது. இந்தக் கப்பல் மூலம் 673 தமிழக மீனவர்கள் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கிறார்கள்.

இந்தத் தகவலை இந்தியக் கடற்படை தனது கீச்சகப் பக்கத்தில் பதிவேற்றியுள்ளது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 700க்கும் மேற்பட்ட மீனவர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஈரானில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். கொரோனா வைரஸ் காரணமான முடக்கத்தால் அவர்கள் தாயகம் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களைத் திரும்ப அழைக்கக்கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த நிலையில் அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த நிலையிலேயே இந்தியக் கடற்படை அவர்களை நாட்டுக்குக் கொண்டுவரும் செயலில் இறங்கியுள்ளது.

# ஒரு கோடியை எட்டுகிறது கொரோனா!



உலகம் முழுவதும் கொரோனாத் தொற்றால் இன்று காலைவரையான நிலவரப்படி கிட்டத்தட்ட 97 இலட்சத்து 14ஆயிரத்து 951பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் ண்ணிக்கை மிக விரைவில் ஒரு கோடியைத் தொடவுள்ளது. இதுவரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4இலட்சத்து 91ஆயிரத்த 868 ஆகப் பதிவாகி உள்ளது. 52இலட்சத்து 50ஆயிரத்து 201 பேர் குணமடைந்துள்ளனர்.

இறப்பு மற்றும் தொற்று எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடத்தில் பிறேசில் உள்ளது.

இந்தச் சூழலில் டெக்ஸாமெதசோன் ஸ்டெராய்ட் மாத்திரைகள் சுவாசக் கருவி உதவியுடன் இருக்கும் நோயாளிகளில் 35சதவீதம் பேரினதும் கூடுதல் ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளில் 20சதவீதம் பேரினதும் உயிரிழப்புகளைத் தடுத்துள்ளதாக பிரிட்டனில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கூறியதையடுத்து அந்த மாத்திரைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பின்லேடன் பெரும் ‘தியாகி’ இம்ரான்கான் தெரிவிப்பு

அமெரிக்காவல் சாகடிக்கப்பட்ட அல் கொய்தா அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் தியாகியாவார் என்று பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே ஒசாமா பின்லேடனைத் 'தியாகி' என்று அவர் குறிப்பிட்டார். அத்துடன் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அமெரிக்கா முன்னெடுத்த அவருக்கு எதிரான போரில் பாகிஸ்தான் பங்கேற்றிருக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். இதுகுறித்து இம்ரான்கான் மேலும் கூறியபோது, அமெரிக்கப்



படைகள் பாகிஸ்தானுக்குள் நுழைந்து ஒசாமாவைக் கொன்றன.

பாகிஸ்தான் அரசுக்கு இது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. இதன் பிறகுதான் பாகிஸ்தானை அனைவரும் எதிர்மறையாக விமர்சிக்கத் தொடங்கினர்.

இதன் மூலம் நாடு தர்மசங்கடத்துக்கு ஆளானது. அமெரிக்கப் படையினரின் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புப் போரில் 70ஆயிரம் பாகிஸ்தானியர்கள் சாவடைந்துள்ளனர். அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் பங்கேற்றிருக்கவே கூடாது, என்று தெரிவித்தார்.

## அமெரிக்காவில் 2கோடி பாதிப்பு

அமெரிக்காவில் குறைந்தது இரண்டு கோடி மக்களுக்கு ஏற்கனவே கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருக்க கூடும் என்று அந்த நாட்டின் சுகாதாரத்துறை அதிகாரிகள் வெளியிட்டுள்ள புதிய மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவில் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ள 24 லட்சத்தை விட உண்மையான பாதிப்பு பத்து மடங்கு அதிகமாக இருக்கும் என்று அந்த நாட்டின் நோய்க்கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிவேகமாக உயர்ந்து வரும் நிலையில் இந்தத் தகவல் வெளிவந்துள்ளது. அமெரிக்காவில் இதுவரை 24 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் நோய்த்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

## ஆசிய நாடுகளில் இனி அமெரிக்கப் படைகள்!



இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சீன இராணுவத்தின் அச்சுறுத்தல் அதிகமாகி வருவதால் ஆசிய நாடுகளில் தமது படைகளை நியமிப்பதற்கு அமெரிக்கா பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்க வெளியுறவுச்செயலர் மைக் பாம்பியோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சீனாவின் இராணுவ அச்சுறுத்தலை எதிர்கொள்ள நாங்கள் சரியான நிலையெடுப்பதற்குப் பரிசீலித்து வருகிறோம். காலத்தின் சவால்களை நாங்கள் சிந்தித்து வருகிறோம், அச்சுறுத்தலை எதிர்கொள்ள போதிய படை ஆதாரங்கள் நம்மிடையே உள்ளதாகக் கருதுகிறேன்.

இந்தப் பரிசீலனை அதிபர் ட்ரம்ப்பின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்படுகிறது, இதன் அங்கமாக ஜேர்மனியில் படைகளைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சில இடங்களில் அமெரிக்கப் படைப் பலத்தைக் குறைத்து இந்தியா, மலேசியா, வியட்நாம், இந்தோனேசியா, மற்றும் தென்சீனக் கடல் பகுதியில் நிலைநிறுத்தத் திட்டமிட்டு வருகிறோம். எனவே அமெரிக்கப் படைப்பலம் குறைக்கப்படும் நாடுகள் தங்களுக் கான பாதுகாப்பைத் தாங்களே வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள பகுதிகளில் சீன இராணு வத்தை எதிர்கொள்ள முடியும், இது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுடன் முழு ஆலோசனைகளை மேற்கொள்வோம் - என்றார் பாம்பியோ.

## நடிகைக்குச் சிறை!



அரசை விமர்சித்த ஈரானின் பிரபல நடிகைக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு வெளியான தி சேல்ஸ்மேன் என்ற திரைப்படத்தில் நடித்த ஈரானிய நடிகையான தரனாஹ் அலிதூஸ்டிக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இப்படத்திற்கு 2017ஆம் ஆண்டு ஒஸ்கார் விருது கிடைத்திருந்தது. இதனால் மிகவும் பிரபலமாகியிருந்த நிலையில் தரனாஹ் அலிதூஸ்டி ஈரானில் வீதி ஒன்றில் ஹிஜாப் அணியாததற்காக ஒரு பெண்ணைப் பொலிஸார் தாக்கும் காணொலியைச் சமூகவலைத் தளங்களில் பதிவேற்றம் செய்தாக கூறப்படுகிறது.

இது அரசுக்கு எதிரான பிரச்சார நடவடிக்கைகள் என்று குற்றம் சாட்டப்பட்டு, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுத் தற்போது அவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், அவர் உடனடியாகச் சிறையில் அடைக்கப்படுவாரா? என்பது குறித்து தெரியவில்லை.

## புடினின் ஆட்சியைத் தீர்மானிக்கும் வாக்கெடுப்பு ரஷ்யாவில் ஆரம்பம்



ரஷ்ய அதிபர் புடினின் பதவிக் காலத்தை நீடிப்பதற்குரிய பொது வாக்கெடுப்பு தொடங்கியது.

2008ஆம் ஆண்டு வரை, 2 முறை தொடர்ந்து ரஷ்யாவின் அதிபராக இருந்த, புடின், அதன் பின்னர் அந்த நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தார். 2012ஆம் ஆண்டில் மீண்டும் அதிபர் பதவிக்கு வந்த அவர், 2018ஆம் ஆண்டுத் அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார்.

அவரது பதவிக் காலம், 2024 ஆம் ஆண்டுடன் முடிகிறது. அதன் பின்னர் அவர் அதிபர் தேர்தலில் போட்டியிட ரஷ்யச் சட்டத்தில் இடமில்லை. இந்த நிலையில், அரசமைப்புத் திருத் தங்கள் மூலம் பல்வேறு சீர்திருத்தங்களை செயற்படுத்தப் போவதாகப் புடின் அறிவித்து அதன்படி, நாடாளுமன்றத்தில் கடந்த மார்ச் மாதம் புதிய அரசமைப்புத் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

அதில், ரஷ்ய அதிபர் பதவி காலத்துக்கான வரம்பைத் தளர்த்தும் ஏற்பாடு உள்ளடக்கப்பட்டது. இது ரஷ்ய நாடாளுமன்றத்தில் ஒருமனதாக நிறைவேறியது. இதைச் சட்டமாக்குவதற்கு முன்பு மக்களின் விருப்பத்தை அறிவதற்குப் பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டுள்ளது. பொது வாக்கெடுப்புக்கு ஒரு வாரம் இருக்கும் நிலையில் மக்களின் கூட் டத்தைத் தவிர்க்கும் பொருட்டு நேற்று வாக்குப்பதிவு தொடங்கியது. ஜூலை 1ஆம் திகதி வரை இந்த வாக்குப்பதிவு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாவது அலை தாக்கவுள்ள நாடுகள்

கொரோனாவின் இரண்டாவது அலை அபாயம் உள்ள நாடுகள் பட்டியலை பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக உலகின் பெரும்பாலான நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு பல்வேறு நாடுகளில் தளர்த்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இது குறித்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு கொரோனாவின் இரண்டாவது அலையால் பாதிக்கப்படவுள்ள 10 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அந்த 10 நாடுகளில், கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கா, ஈரான், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் உள்ளன. இதுதவிர, உக்ரைன், பங்காளாதேஷ், பிரான்ஸ், சுவீடன், இந்தோனேசியா ஆகிய நாடுகளும் அடங்குகின்றன.

## சீனாவில் 13 பேருக்குக் கொரோனா

சீனாவில் புதிதாக 13 பேருக்குக் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துச் சீனாவின் சுகாதார அதிகாரிகள் கூறும்போது, சீனாவில் இன்று புதிதாக 13 பேருக்குக் கெரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 11 பேர் பீஜிங்கைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்தனர். சீனத் தலைநகர் பீஜிங்கில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியுள்ள நிலையில், பரிசோதனை எண்ணிக்கையை அரசு அதிகப்படுத்தியுள்ளது.

கடந்த 12 தினங்களில் 249 பேருக்கு அங்கு தொற்று ஏற்பட்டுள்ளது. பீஜிங்கில் உள்ள ஜின்ஃபாடி உணவுச் சந்தையிலிருந்து கொரோனாத் தொற்று பரவி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# ஐ.தே.கவின் குழந்தை ஐக்கிய மக்கள் சக்தி

## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

கொழும்பு, ஜூன் 26

கறைபடியாத கரங்கள் கொண்ட அரசியல் தலைவரே சஜித் பிரேமதாஸ. அவருக்கு எதிராக எவரும் விரல் நீட்டி குற்றஞ்சாட்டமுடியாது என முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைகொன்றுவிட்டே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவானது. ஆனால், எமது ஐக்கிய மக்கள் சக்தி அவ்வாறு அல்ல.அந்தக் கட்சியானது ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்மாணம். அந்தக் கட்சியின் குழந்தை. இது ஜனநாயக்கட்சி. குடும்ப ஆட்சியுள்ள கட்சி அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு வழங்கிய அனுமதியின் பிரகாரமே எமது பயணம் தொடர்கின்றது.

அரசைத் தோற்கடிப்பதற்கு பலமானதொரு அரசியல் கூட்டணி அவசியம். அதனையே நாம் உருவாக்கினோம். ஜனநாயகம், சமூக நீதி, இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஆகிய மூன்று காரணிகளை முதன்மைப்படுத்தியே ஐக்கிய தேசியக்கட்சி அன்று உருவாக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டுக்கு பின்னர் எமது கட்சியால் அரச தலைவர் ஒருவரை பெறமுடியாமல்போனது. ஐந்து வருடங்களுக்கு மேலாக நாம் எதிரணியில் இருந்ததில்லை. ஆனால் கடந்த 30 ஆண்டுகளில் எம்மால் அரசதலைவர் ஒருவரைப்பெறமுடியவில்லை. ஏன் இப்படி நடந்தது? இதனால்தான் தலைமைத்துவ மாற்றத்தை மக்கள் கோரினார்கள். சஜித்தான் எங்களுக்கு வேண்டும் என மக்கள் வலியுறுத்தினர்.

அதேபோல் நாட்டிலுள்ள புதிய தலைமுறையினருக்கு சம்பிரதாய அரசியல் மீது அதிருப்தி உள்ளது. அதனால்தான் சஜித் போன்றபுதியதலைவர்களைவிரும்புகின்றனர். எனவே, புதிய சந்ததியினர் எதிர்பார்க்கும் மாற்றத்தை நாம் வழங்குவோம்.

தமிழ் மக்கள் மத்தியில் கருணாவை வைத்து ஒரு கருத்தையும், தெற்கில் சரத் வீரசேகரவை வைத்து வேறொரு கருத்தையும் முன்வைக்கின்றனர். ஆனால், சஜித் அணி சந்தர்ப்பவாத அரசியல் நடத்தவில்லை. எனவே, இனவாத, சந்தர்ப்பாத அரசியல் நிறுத்தப்படவேண்டும் – என்றார்.

# கோட்டா மீது மக்கள் இப்போது நம்பிக்கை இழந்து வருகின்றனர்

## அத்துரலிய தேரர் கூறுகின்றார்



கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பான்மையான மக்கள் தற்போது நம்பிக்கை இழந்து வருகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் பேசிய அவர்–

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவின் தோல்விக்கு அமெரிக்க எம்.சீ.சீ. உடன்படிக்கை பிரதான காரணியாக அமைந்திருந்தது.

எம்.சீ.சீ. உட்பட நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உடன்படிக்கைகளை நிராகரிப்பதாக கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் நம்பினர் எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பான்மையான மக்கள் தற்போது நம்பிக்கை இழந்து வருகின்றனர். தற்போதைய அரசாங்கம் எம்.சீ.சீ. உடன்படிக்கையை கிழித்தெறியும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அரசாங்கம்அந்தஉடன்படிக்கையை கைச்சாத்திடும் திசை நோக்கி வழியமைத்து வருகிறது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் முன்னர் அது சம்பந்தமான சில பணிகளை அமெரிக்க தூதரகம் ஆரம்பித்துள்ளது.

இதனால், தொடர்ந்தும் பொய்யானவார்த்தைகளைபயன்படுத்தாது, தேர்தல் வெற்றிக்கான கோமாக பயன்படுத்தாது, எம்.சீ.சீ உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமா, இல்லையா என்பது சம்பந்தமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகத் தெரிவிக்க வேண்டும் எனவும் அத்துரலியேரதனதேரர்குறிப்பிட்டுள்ளார்.

# 1000 ரூபா கைக்கு கிடைக்கும்வரை எந்த அறிவிப்பையும் நம்பமுடியாது

## இராதாகிருஷ்ணன் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 26

தேர்தல் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்தித்து ஆயிரம் ரூபா தொடர்பில் கதைத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றது. 5 வருடங்களாக ஆயிரம் ரூபா தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. எனவே, அத்தொகை கைகளுக்கு கிடைக்கும் மட்டும் எந்த அறிவிப்பையும் நம்பமுடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான முன்னாள் அமைச்சர் கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

2015 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றபோது ஆயிரம் ரூபா குறித்த அறிவிப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸே விடுத்தது. ஆனால், அது இன்னும் சாத்தியப்படவில்லை. தற்போது 2020 ஆம் ஆண்டில் இருக்கின்றோம். பொதுத்தேர்தலும் நடைபெறவுள்ளது. ஆனால், 5 ஆண்டுகள் முடிந்தும் ஆயிரம் ரூபா பற்றியே பேசப்படுகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை சந்தித்து இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும் என பிரசாரம் செய்கின்றனர். என்று ஆயிரம் ரூபா கிடைக்கின்றதோ அன்று சந்தோசமாக ஏற்றுக்கொள்கின்றோம்.

தொழிலாளர்களுக்கு சம்பளத்தை வழங்குமாறு கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகித்தவர்கள் இதற்கு முன்னர் அறிவிப்புகளை விடுத்திருந்தாலும், அவ்வாறு நடைபெறவில்லை. எனவே, 22 கம்பனிகளும் முன்வந்து, வழங்கினால்தான் சாத்தியமாகும்.

தேர்தல்மூலம் ஆட்சியைப் பிடிப்பதற்கே எமது கூட்டணி முயற்சிக்கின்றது. எனவே, ஆளுங்கட்சிக்கு தாவவேண்டிய தேவை எமக்கு இல்லை.



நாம் தாவுவோம் என கூறுபவர்களையும் எமது ஆட்சியின் கீழ் இணைத்துக் கொள்வோம்.

ஆயிரத்துடன் நின்றுவிடக்கூடாது. அதற்குமேல் வருமானம் உழைக்கும் வழிமுறைகளை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே சஜித் பிரேமதாசவின் எண்ணமாக இருக்கின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை வருமானம் உழைக்கும் சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

கருணா அம்மான் வாய்ப்பேச்சு வீரராக கருத்தை கொட்டிவிட்டார். தற்போது தடுமாறுகிறார் – என்றார்.

# கைதிகள் போராட்டம்

கொழும்பு, ஜூன் 26

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர், உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று வியாழக்கிழமை இரவு முதல், 15க்கு மேற்பட்ட கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் எனச் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் ஒவ்வொரு நாளும், 2 மணித்தியாலங்கள் சிறையில் இருந்து வெளியே வந்து உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், வெளியே செல்லும் நேரத்தை அதிகரிக்குமாறு கோரி, இந்தக் கைதிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், ஒருவருக்கொருவர் சந்திக்க முடியாதபடி தங்களை அழைத்துச் செல்வதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir
காற்றாலை




நாளைய (27.06.2020) தலைப்பு
காற்றாலை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# அமரர் சி.இரங்கராஜாவுக்கு பொன்னாலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஜூன் 26

ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாண முன்னாள் பிரதம செயலாளர் அமரர் சிவகுருநாதன் இரங்கராஜாவிற்கான அஞ்சலி நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பொன்னாலை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொன்னாலையை பிறப்பிடமாகக்கொண்ட இரங்கராஜா இணைக்கப்பட்டிருந்த வடக்கு – கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், பிரிக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், வடக்கு மாகாண முன்னாள் ஆளுநரின் செயலாளர், யாழ்.பல்கலைக்கழக பேரவையின் முன்னாள் உறுப்பினர், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் போன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பதவிகளை வகித்தவர்.

இப்பதவிகள் மூலம் வடக்கு – கிழக்கில் ஏராளமாக அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தவர்.

சுகயீனம் காரணமாக கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் அமரத்துவமடைந்த இவரது பூதவுடல் கொழும்பிலேயே தகனம் செய்யப்பட்டது. இந்நிலையில், பொன்னாலையில் இவருக்கான அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# திருமலையில் பெருமழை

(எவ்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் நீண்ட வெயில் காலத்திற்கு பின்னர் நேற்றிரவிலிருந்து இன்று அதிகாலை வரை பெய்த கடும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் மழைநீரில் மூழ்கி காணப்படுகின்றமையோடு சிறுவீதிகளும் மூழ்கியுள்ளன.

இம்மாவட்டத்தின் கந்தளாய், முள்ளிப்பொத்தானை,தம்பலாகாமம், திருகோணமலை மற்றும் வான்எல போன்ற பகுதிகளிலும் கடும் மழை பெய்துள்ளது.

நீண்ட வெயில் காலநிலைக்குப் பின்னர் பெய்த கடும் மழை நீர் விவசாயத்திற்கு மிகவும் பிரயோசனமாக காணப்படுவதோடு, வீட்டுத்தோட்டம் மற்றும் தோட்டப் பயிர்ச் செய்கைகளுக்கும் இன்றியமையாததாகவுள்ளது.

பின்தங்கிய கிராமங்களில் தாழ்நிலப் பகுதிகள் மழை நீரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்பில் பொதுப் போக்குவரத்துக்களில் சோதனை

சுகாதார அமைச்சால் கொரோனாவை கட்டுப்படுத்த பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த கடந்த 22ஆம் திகதி தொடக்கம் தேசிய ரீதியிலான கொரோனா விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் அங்கமாக பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் முகக் கவசம் அணிந்து உரிய சமூக இடைவெளிகளைப் பேணி போக்குவரத்தில் ஈடுபடுகின்றனரா என்று நேற்று சோதனை மேற்கொள்ளப்பட்டது.

தேசிய ரீதியான இந்தச் செயற்திட்டம் வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது. நகரின் பிரதான வீதிகளில் பயணம் செய்த பஸ்கள் மறிக்கப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. பெரும்பாலான பேருந்துகளில் முகக் கவசம் அணியாமலும், உரிய சமூக இடைவெளி இன்றியும் அதிகளவான பயணிகள் ஏற்றப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பஸ்ஸின் நடத்துனர்கள், சாரதிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

விழிப்புணர்வுவாரத்தில் கடந்த 22ஆம் திகதி அனைத்து சந்தைகளிலும், 23 ஆம் திகதி உற்சவங்கள் நடைபெறும் ஆலயங்களிலும், 24 ஆம் திகதி அரச, தனியார் அலுவலகங்களிலும் நேற்று பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று அனைத்து திருமண மண்டபங்களிலும், தொடர்ந்து இன்று அனைத்து உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

# யாழ். ஆயருடன் மக்கள் முன்னணி சந்திப்பு





யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசத்துக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது

பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் போட்டியிட்டும் நிலையில் இன்றைய தினம் மறைமாவட்ட ஆயரை சந்தித்து தேர்தல் தொடர்பான விடயங்கள்தொடர்பில்அவருடன் கலந் துரையாடி, ஆயரின் ஆசி பெற்றனர்.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

# குடிபோதை நம்வாழ்வில் கெடுதியே தந்துவிடும்!



போதை தலைக்கேறி புத்தி தடுமாறி
பாதைதனை மறந்து பரிதவிக்கும் வேளையிலே
காதும் அடைத்துவிடும் கண்களுமே கட்டிவிடும்
பேதலித்த மனத்தோடு பெருமரமாய் வீழ்ந்திடுவர்

வேர்த்து விறுவிறுக்க வெயிலெல்லாம் திரிந்தலைந்து
பார்த்து உழைத்தபணம் பாதியிலிலே போய்விடுமே
சோற்றுக்குக் காத்திருப்போர் சுகமின்றி படுத்திருப்போர்
வீட்டிலே காத்திருக்க வீதியிலே குடித்துநிற்பார்

நடுவீதி நாயகராய் நாளுமே நிற்பார்கள்
தெருநாய்கள் கண்டுவிடின் தீராத கோபம்கொள்ளும்
வெறிதலையில் ஏறிவிடின் நெறியெல்லாம் கெட்டுவிடும்
தறிகெட்டுப் போயிடுவார் தம்மையே இழந்திடுவார்

குடிபோதை வந்துவிடின் குணமெல்லாம் கெட்டுவிடும்
மனைகூட அவனுக்கு மாறாகத் தெரிந்துவிடும்
வாய்மையும் ஓடிவிடும் வல்லமையும் ஒழிந்துவிடும்
பேய்கொண்ட மனமங்கே பேருருவம் கொண்டுவிடும்

சிவமாக இருந்தவனோ சவமாகப் போயிடுவான்
உவமானம் சொல்வதென்றால் உயிரற்ற பிணம்தானே
மதியிழந்து கதியிழந்து மானமும் இழந்துநிற்கும்
குடிபோதை நம்வாழ்வில் கெடுதியே தந்துவிடும்

நாகரிகம் என்றெண்ணி நன்றாகக் குடித்திடுவார்
நாட்டிலே உள்ளவரை நாகரிகம் என்னாகும்
ஆதலால் குடிவிடுவோம் அனைவர்க்கும் வாழ்வுவரும்
பேதலிக்கும் மனக்குரங்கை பிய்த்தெறிவோம் வாருங்கள்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மெல்பேண் ஆஸ்திரேலியா**

# அதிபரின் சம்பளத்துடன் ஆசிரியப் பணி புரிவோர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜுன்25

வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர்களாக நியமனம் பெற்றவர்களில் 27 பேர் ஆசிரியர்களாக பணியாற்றுகின்ற போதும் அதிபர் சம்பளத்தை பெறுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி புதிதாக 80 பேருக்கு அதிபர் நியமனம் கிடைத்தது. அந்த 80 பேரில் 41 பேர் கடமையைப் பொறுப்பேற்றனர். 21 பேர் மேன் முறையீடு செய்து மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சிடம் அனுமதி கோரி விண்ணப்பித்தனர். அவ்விடயத்தில் நீண்ட இழுபறி நிலைமை காணப்பட்டது. தமது நீண்டகால ஆசிரிய சேவையின் போது வன்னியின் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிப் பின்னர் யாழ் வந்த நிலையில், அதிபர் சேவையில் மீண்டும் வன்னியில் பணியாற்றுமாறு நிர்ப்பந்திக்கப்படுவதோடு வன்னியிலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலமையும் காணப்படுகின்றது எனத் தெரிவித்திருந்தனர்.

இந்த நுலையில் மேன்முறையீடு செய்த 21 பேரில் சிலர் ஒத்துமாறிக் கடமைகளைப் பொறுப்பேற்றனர். சிலர் கடமைகளைப் பொறுப்பேற்காத நிலைமை நீடித்தது. இவ்வாறானவர்களிற்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் பல பாடசாலைகளிற்கு பிரதி அதிபர் நியமனம் வழங்கப்பட்டு, பாடசாலைகளில் பாடசூசி வழங்கப்பட்டு கற்பித்தலுக்கும் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு இரு பணிகளவயும் ஆற்றுவோர் அதிபரா அல்லது ஆசிரியர்களா என்ற நிலையில் அதுபர் சம்பளத்தை பெற்றுக்கொண்டு ஆசிரியர் பணியை ஆற்றுகின்றனர் கல்வி அமைச்சின் கணக்காய்வு பிரிவு கண்டுள்ளமை தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

அதிபர் நியமனம் வழங்கப்பட்ட பின்பு மாகாணத்தால் பிரதி அதிபர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்தில் நிலவும் கணித , விஞ்ஞான பாடங்களிற்கான ஆசிரியர்களின் தேவை அதிகமாகவுள்ளதனால் நேரசூசி வழங்கப்பட்டதே அன்றி அவர்கள் அதிபர்களே என்றார்.

# போதை வியாபாரிகள் சிக்கினர்!

மட்டக்களப்பு, ஜுன் 26

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடியில் வெவ்வேறு இடங்களில் 2440 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஓட்டமாவடி முன்றாம் வட்டாரத்தில் பரிதா பேக்கரி வீதியில் வசிக்கும் 33 வயதுடைய பிரபல போதைப் பொருள் வியாபாரியிடம் இருந்து 1280 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளமையுடன், ஓட்டமாவடி முதலாம் வட்டாரத்தில் பரிகாரியார் வீதியில் வசிக்கும் 29 வயதுடைய நபரிடம் இருந்து 1160 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதை தடுப்புப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் துசிதகுமார தலைமையில் போதை தடுப்புப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் எம்.பி.எம்.தாஹா குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஹெரோயினுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஹெரோயின், போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா உட்பட்ட போதைப்பொருள்கள் வியாபாரம் மும்முரமாக நடக்கும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என வாழைச்சேனைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அறிவுச் செயற்பாடுகளூடாக போதைப் பொருளை ஒழிப்போம்

## ஜூன் 26 சர்வதேச போதைப் பொருள் ஒழிப்புதினம்

வி.பிரசாந்தன்

போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டு சிறந்த அறிவின் ஊடாக முழுமையான பராமரிப்பை ஏற்படுத்துதல் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த முறை தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. அண்மைக்காலங்களில் கொரோனாத் தொற்றுக் காரணமாக மதுபான சாலைகள் மூடப்பட்டிருந்தன. இந்தச் சூழலில் ஒரு சிலர் அந்தப்பழக்களிலிருந்து விடுபடக்கூடிய நிலைமை காணப்பட்டமை முக்கியமான ஓர் அம்சமாகும்.

### ஐ.நாவின் அங்கீகாரம்

போதை இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்குவோம் என்ற எண்ணக்கருவின் கீழ் 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால்



அங்கீகரிக்கப்பட்ட நாளாக இது கருதப்படுகிறது. போதை சமூகத்தை அழிக்கும் ஒரு அரக்கன். போதைப்பொருளால், அவர் மட்டுமின்றி, அவரது குடும்பம் மற்றும் சமுதாயமும் சீரழிந்து போகின்றன. இதுதான் அனைத்து வகையான நோய்களுக்கும் முன்னோடி. சிலர் இதற்கு அடிமையாகவே மாறி விட்டனர்.

போதைப்பொருள் பயன்பாடு எந்தளவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அதைவிடச் சட்டவிரோதமாகக் கடத்தல்களில் ஈடுபட்டு அதன் மூலம் பணம் ஈட்டப்படுவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. போதைப்பொருள் என்றவுடன் தனித்து சிகரெட் மதுபானத்தினை மட்டுமே அனைவரும் கருதுகின்றனர். அதைவிடுத்தும் கஞ்சா, கொகைன், பிரவுன் சுகர், ஹெரா



யின், அபின், புகையிலை, மது, ஊக்க மருந்து, ஒயிட்னர் மற்றும் சில மருந்துகள், ஆகியவை இளைஞர்களிடம் வேகமாகப் பரவி வருகின்றன. உடலை மட்டுமின்றி, மனதையும் சிதைத்துக் குடும்ப வாழ்க்கையையும் அழித்து, முடிவில் இறப்புக்கு அழைத்துச் செல்பவை இவை.

### மாணவர்களும் அடிமையாகின்றனர்

இன்றைய சூழலில் இளைஞர்கள் மட்டுமல்லாமல், மாணவர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாவது வருந்தத்தக்க விடயமாகும். இந்த மாதிரியான மாணவர்களுக்குச் சரியான விழிப்புணர்வு வழங்கி அந்தப் பழக்கத்தில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டியது எமது கடமையாகும். போதைப் பொருள் வியாபாரம் உலகில் எங்கு நடந்தாலும் அது அந்த நாட்டை அரசியல், பொருளாதார, கலாசார வீழ்ச்சியை நோக்கியே நகர்த்தும். அரசியல்வாதிகளும், பொலிசாரும், நீதித் துறையினரும் போதைப் பொருள் மாபியாக்களின் வலையில் வீழ்ந்து விட்டால் நிலைமை இன்னும் பாரதூரமானது.

தென்னாசிய பிராந்தியத்தில் வளர்ந்து வரும் நாடான இலங்கைக்கு இது ஒரு பாரிய சவால். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு நிரந்தரமாக அடிமையாகியுள்ளதாகத் தேசிய போதைத் தடுப்பு சபை எச்சரித்துள்ளது. குறிப்பாகச் சிறுவர்கள், இளைஞர்களிடையே இந்தப் பாவனை சடுதியாக அதிகரித்திருப்பதை அது சுட்டிக்காட்டியுள்ளது. போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் 50சதவீதம் திருமணமாகாதவர்களாவர். இவர்களுள் பலர் பல்கலைக்கழகம், உயர்தர, சாதாரண தர மாணவர்களாவர். 45சதவீதும் திருமணமானவர்கள். இதில் 50சதவீதம் முதல் 69சதவீதம் வரையானவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிடுகிறது.

### அவலத்தை மறப்பதற்காகக் குடி

சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்கக் குடி ஒரு தீர்வாகக் கையாளப்படுகின்றது. குடி சமூகப் பிரச்சினைக்கு வடிகாலாகின்றது. இதன் விளைவாக நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் 43 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாகி விட்டனர். பெருந்தோட்டப் பகுதிகளில் இது 55சதவீதமாக



உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாகி உள்ளனர். இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செல வழிக்கும் பணம் நாளொன்றுக்கு 950 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் நடக்கின்ற குற்றச் செயல்களில் 38 சதவீதமானவை மதுபாவனையால் ஏற்படுகின்றன.

அதாவது, போதையால் ஏற்படுகின்றன. கடந் தாண்டில் நடந்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2ஆயிரத்து 800 ஆகும். இதில் 90 சதவீதமானவை மதுவால் நடந்துள்ளன. ஒட்டுமொத்தத்தில் சமூகவிரோத குற்றச்செயல்கள் போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்றன.

### ஒரு நாளில் 97கோடி

இலங்கையர் ஒரு நாளைக்கு மதுபானத்துக்கும் புகைத்தலுக்குமாகச் செலவிடும் தொகை 97 கோடி ரூபா என மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித் துள்ளது.

இதில், 50 கோடிரூபா மதுபானத்துக்கும், 9 கோடி ரூபா பியர் வகைகளுக்கும், 38 கோடி ரூபா புகைத்தலுக்கும் எனச் செலவிடப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கலால் திணைக் களத்தினதும்,



சிலோன் டுபாக்கோ நிறுவனத்தினதும் தகவல்களை வைத்து இந்த அறிக்கை தயா ரிக்கப்பட்டுள்ளது.

உலகில் எல்லா நாடுகளும் எல்லாச் சமூகங்களும் போதைப்பொருள்பிரச்சினையைஎதிர்கொண்டுள்ளன. என்னதான் நடவடிக்கைகள், திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் போதைப்பொருள் வலையமைப்பை சீர்குலைக்க முடியாதிருப்பது கசப்பான உண்மை.

சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்கக் குடி ஒரு தீர்வாகக் கையாளப்படுகின்றது. குடி சமூகப் பிரச்சினைக்கு வடிகாலாகின்றது. இதன் விளைவாக நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளில் 43 சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாகி விட்டனர்.

### உச்ச தண்டனை வேண்டும்

இத்தகைய குற்றத்தில் சம்பந்தப்படக் கூடியவர்கள் எவ்வித தயவும் இன்றித் தண் டிக்கப்பட வேண்டும். இவற்றைக் கண்டறிவதற்குப் புதிய உபாய மார்க்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். போதைப்பொருள் பயங்கரவாதத்தை இலங்கையிலிருந்து ஒழிக்க அதிகாரமட்டம் முதல் சாதாரண குடிமகன் வரை அனைவரும் தங்கள் ஆதரவை முழுமையாக வழங்க வேண்டியது கட்டாயக் கடமை. போதைப்பொருள் கடத்தல், விற்பனை செய்தல் போன்றவற்றை ஒழிக்க சட்டங்கள் மூலம் உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன.

ஆனால் போதை பயன்பாடு அதிகரிக்கிறதே தவிர குறையவில்லை. இலங்கையைப் பொருத்தள வில் இன்று பாடசாலை மாணவர்களை நோக்கிய தாக இந்தப் போதைப்பொருள் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. குறிப்பாகப் பெற்றோர்கள் இது தொடர்பில் தெளிவாக இருக்க வேண்டும். அத்துடன் காணப்படுகின்ற சட்டங்கள், மற்றும் நடைமுறைகளை மேலும் அதிகப்படுத்தல் வேண்டும். எமது நாட்டிலே இன்று அரசசார்பற்ற நிறுவனங்களின் விழிப்புணர்வுகள் அதிகமாகவே இடம் பெறுகின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.



கூடியளவு அரச நிறுவனங்களும் இதில் இணைந்து செயற்படுதல் அவசியமான ஒன்றாகும். போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குப் போதைப் பழக்கத்தின் தீமைய உணர்த்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மையங்களுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து அவர்களின் மறுவாழ்வுக்கு உதவ வேண்டும். எதிர்காலத்தில் போதைப்பொருள் அற்ற தேசத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# சித்திரவதைகளற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்



**சித்திரவதைக்கு ஆளானவர்க்கான ஆதரவுத் தினம் ஜூன் 26**

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 26ஆம் திகதி உலக சித்திரவதைக்கு ஆளானோர் ஆதரவு நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. உடல், உள ரீதியாகச் சித்திரவதைகளுக்கு உட்பட்டோருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவு அளிக்கும் இந்தத் தினத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவு கிடைக்கின்றது. அது மட்டுமில்லாது உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. இந்த நோக்கத்தை மையமாகக் கொண்டே இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

### சித்திரவதை என்பது...?

சித்திரவதை என்பது உடல் மற்றும் உள ரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற கடுமையான தாக்குதல்களைக் குறிக்கின்றது. கடுமையான வலியோடு கூடிய மற்றும் ஏதாவது ஓர் உள்நோக்கத்தின் அடிப்படையில் மனிதாபிமானம் அற்ற நிலையில் நடந்து கொள்ளும் செயற்பாட்டைச் சித்திரவதை என்று கூறலாம். சித்திரவதை என்பது ஒரு சமூகக் குற்றமாக அனைவராலும் பார்க்கப்படுகின்றது, சித்திரவதை செயல்களில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு எதிராகப் பல சட்டங்கள் காணப்பட்டாலும் இவ்வாறான செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. சித்திரவதை குடும்பத்திலே தொடங்கி, பாடசாலை, கல்லூரிகள், சிறைச்சாலை போன்ற பல இடங்களில் இடம்பெறுகின்றது. சமூகத்தில் சித்திரவதையால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் நலிவான குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள், சிறுபான்மையினர், ஏழைகள், போன்ற விளிம்பு நிலையினராகவுள்ளனர். பெரும்பான்மையான சமூகத்தினரால் சிறுபான்மை சமூகம் சித்திரவதையால் பாதிப்புறுகின்றனர். ஆதிக்கம் நிறைந்தவர்களுக்குக் கீழ்ப்படிந்தும், பயந்தும் வாழ்கின்றனர். போர்க் குற்ற நடவடிக்கையின் போதும் சித்திரவதை இடம்பெறுகின்றது.



### வெளிப்படுத்தப் பின்னடித்தல்

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோர் அதைச் சமூகத்திற்கு வெளிப்படுத்தத் தவறுதல் ஆதிக்கம் நிறைந்தவர்கள் மேலும் மேலும் குற்றம் புரிவதற்குச் சாதகமாய் அமைகின்றது. சித்திரவதையானது குடும்பத்தில் தான் தொடங்குகின்றது எனலாம். கணவன், மனைவி, பிள்ளைகள், வயது சென்ற பெற்றோர் எனப் பல மட்டங்களில் குடும்பத்தில் துன்புறுத்தல்கள் காணப்படுகின்றன. சில குழந்தைகள் தமது சிறு பராயம் முதலே சித்திரவதைகள் போன்ற செயல்களை குடும்பத்தில் நடைபெறுகின்ற சம்பவங்கள் ஊடாகவும், திரைப்படங்கள் ஊடாகவும் கற்றுக்கொண்டு வயது செல்லலச்செல்ல சித்திரவதை செயற்பாட்டில் ஈடுபடுகின்றது.

### பாடசாலையில் சித்திரவதை

பாடசாலை மட்டத்திலும் சித்திரவதைகள் இடம்பெறுகின்றன. அதிபர், ஆசிரியர், மற்றும் சக மாணவர்கள் மூலமாகச் சித்திரவதை மேற்கொள்ளப்படுகின்றது. பிள்ளைகள் பாடசாலைக்கு சமூகமளிக்காதிருத்தல், வீட்டில் கொடுக்கப்படுகின்ற வேலைகளை



செய்து வராமை, பாடசாலைக்குத் தாமதமாகி வருதல், சிறு சிறு தவறுகள் செய்கின்ற பட்சத்தில் மாணவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் உடல், உள ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் தற்காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பல்கலைக்கழகம், கல்வியியல் கல்லூரிகள் போன்றவற்றிலும் பகிடிவதை மூலமாகச் சித்திரவதைகளை மாணவர்கள் எதிர்கொள்கின்றனர். மூத்த மாணவர்கள் இளைய மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்துவதன் மூலம் சித்திரவதை இடம்பெறுகின்றது. இவ்வாறு சித்திரவதை மேற்கொள்ளப்படும் மாணவர்கள் தங்களது கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். தற்காலங்களில் இவ்வாறு பகிடிவதை செயல்கள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தடைசெய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.



### போரின்போது சித்திரவதை

போர் நடவடிக்கையின் போதும் சித்திரவதை இடம்பெறுகின்றது. தங்களின் மீது போர் மேற்கொள்ளப்படுகின்ற போது பயந்து கொண்டு சரணடைகின்றவர்கள் மீது கொடூரமான முறையில் துன்புறுத்தப்பட்டு கொல்லப்படுகின்றனர். சிறைச்சாலைகளிலும் இத்தகைய சம்பவம் இடம்பெற்று வருகின்றது. வலிமையானவர்கள் மென்மையானவர்கள் மீது பல்வேறுபட்ட துன்புறுத்தல்களை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு எங்கு பார்த்தாலும் சித்திரவதை நாளுக்கு நாள் பல வடிவங்களில் இடம்பெற்ற வண்ணம் உள்ளது. வெறுமனே அடித்து துன்புறுத்தினால் மட்டும்தான் சித்திரவதை என்று கூறமுடியாது. உடல் ரீதியாகப் பாதிக்காவிட்டாலும் உள ரீதியாக யாரெல்லாம் பாதிக்கப்படுகின்றார்களோ, அவர்கள் அனைவரும் சித்தரவதைக்கு உள்ளானவர்களாகவே கருதப்படுகின்றனர். உதாரணமாக வீட்டில் வயதுசென்ற முதியவர்கள் காணப்பட்டால் அவர்களது மனம் நோகும்படி வார்த்தைகளால் கடுமையாக திட்டித் தீர்ப்பதைக் குறிப்பிடலாம்.

### படுகொலைகள் இதன் உச்சம்

இந்த உலகில் பல ஆயிரக்கணக்கானோர் மனிதாபிமான முறையில் நடந்து கொள்கிறார்களா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. திட்டமிடப்பட்ட முறையிலும், ஏதேர்ச்சியான முறையிலும் சித்திரவதைகள் இடம்பெறுவதும் நிகழ்கிறது. திட்டமிடப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற



படுகொலைகள் சித்திரவதையின் உச்சக்கட்டம் எனலாம். அந்தச் செயல்கள் எல்லாம் அடிப்படை மனித உரிமைகளையும், மனிதாபிமான தன்மையினையும், மனித மான்பையும் கேள்விக்குறிக்கு உட்படுத்துகின்றது.

இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெக்க வேண்டும். உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்படைந்து காணப்படுகின்ற இவர்களைப் பாதுகாத்துப் பழைய வாழ்க்கைக்கு மீட்டெடுப்பது சமூகத்திற்கு இருக்கின்ற முக்கிய கடமையாகும். மனிதத் தன்மையும், மனித உரிமையும் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இவற்றினை மீட்டுக்கொடுப்பதற்கு எம்மாலான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இன்று சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் 200 இற்கு மேற்பட்ட அமைப்புக்கள் ஐ.நா சபையின் ஆதரவில் இயங்கிவருகின்றன. ஆகவே சித்திரவதையை முற்றாக தடுத்து சமூகத்திலிருந்து ஒழிக்க வேண்டும்.

கட்டுரையாளர் - கிழக்குப்பல்கலைக்கழக சமூகவியல் துறை மாணவர்.

# நாடு முழுவதும் எல்லோருக்குமே சொந்தமானது என்றால் கலவரங்களை ஏற்படுத்தித் தமிழரைக் கலைத்தமை ஏன்?



## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி

**நாடு முழுவதும் எல்லோருக்குமே சொந்தமானது என்றால் கலவரங்களை ஏற்படுத்தித் தமிழர்களை ஏன் கலைத்தீர்கள்?**

**- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியிருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.**

இவ்விவகாரத்தை ஒட்டி விக்னேஸ்வரன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

"தாயகம் எங்களுடையது எனக் கூறி யாரும் நாட்டை மீண்டும் துண்டு போட முடியாது" - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் கூறினார் எனச் செய்திகள் வெளியாகின.

பிரதமரின் மேற்கண்ட கூற்றுப் பற்றிய செய்தியைப் பத்திரிகைகளில் வாசித்தேன். முழு நாடும் எல்லோருக்கும் சொந்தம் என்ற பாணியில் அவர் பேசினார் போல் தெரிகின்றது.

கௌரவ பிரதமரிடம் சில விடயங்களைக் கேட்க வேண்டியுள்ளது.

1. இந்த நாடு எல்லோர்க்கும் உரியது என்று தானே தமிழர்கள் நாடு பூராகவும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்? பின் எதற்காக தெற்கு சிங்களவருக்கு உரியது 'தமிழனே வெளியேறு' என்று கூறி 1958 ஆம் ஆண்டின் கலவரத்தை உண்டு பண்ணினீர்கள்? நாடு முழுவதும் எல்லோர்கும் சொந்தமென்றால் - எல்லோர்க்கும் சம உரிமை இந்த நாட்டில் இருப்பது உண்மையானால் - எதற்காக எம்மவரை பல கலவரங்கள் மூலம் வடக்கு,கிழக்கு தவிர்ந்த இடங்களில் இருந்து விரட்டி அடித்தீர்கள்?

2. எதற்காக நடந்த கலவரங்களின் சூத்திரதாரிகள் யார் என்று இதுவரையில் அறிய முற்படவில்லை? எதற்காக குறித்த வன்செயல்களுக்காக எவருமே நீதிமன்றங்களில் நிறுத்தப்படவில்லை?

3. ஏன் தொடர் அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது வன்முறையை ஏற்படுத்திவிட்டு அவர்களை வடக்கிற்கும் கிழக்கிற்கும் கப்பல்கள் மூலம் அனுப்பி வைத்தார்கள்? வடக்கும், கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்பதாலா?

4. முழு நாடும் எல்லோர்க்கும் சொந்தம் என்றால் ஏன் தெற்குப்புற குடியேற்றங்களில் தமிழர்களை குடியேற்றவில்லை? ஏன் வடக்கு, கிழக்கிலும் சிங்களவர், பிற இடங்களிலும் சிங்களவர் என்று குடியிருத்தப்படுகின்றார்கள்? நீங்கள் நாடு முழுவதும் எல்லோர்க்கும் சொந்தம் என்று கூறுவது சிங்களவர் நாடுபூராகவும் பரந்து வாழ இடம் அளிக்க வேண்டும் என்பதால்த்தான் என்பது எங்களுக்கு நன்கு புரிகின்றது. தமிழர்கள் பெருவாரியாக வந்து ஹம்பந்தோட்டை மதமுலானவில் காணி வாங்க நீங்கள் அனுமதிப்பீர்களா?

5. நாடு எல்லோர்க்கும் சொந்தம் என்று கூறும் போது அதெப்படி பௌத்தம் இங்கு வந்த காலத்திற்கு முன்னிருந்தே தமிழர்கள் வடக்கு கிழக்கிலும் பிற இடங்களிலும் குடி இருந்து வந்ததை மறந்தீர்கள்? இன்றும் வடக்கு கிழக்கு, தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்கள் அல்லவா? அன்று தமிழர்களை வடக்கு கிழக்கிற்கு விரட்டி அடிக்கும் போது தெற்கு உங்களுடையது. இன்று விரட்டி அடித்த தமிழர்கள் தங்கள் பிரதேசத்தில் வாழும் போது வடக்கு,கிழக்கு உங்களுடையது. அப்படித்தானே?

6. வடக்கு, கிழக்கு மக்களின் மொழி வேறு, மதங்கள் வேறு, அந்த இடங்களின் சீதோண நிலை வேறு, தாவரப் பரவல் வேறு, மண்ணியல் வேறு, நீர் நிலைகளின் தன்மை வேறு, ஏன் வாழ்க்கை முறை கூட வேறு என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா? அதெப்படி நாங்கள் எங்கள் இடங்களில் இருந்து மேற்படி தனித்துவத்துடனும் தனி இயல்புகளுடனும் வாழ அனுமதியுங்கள் என்றும் நீங்கள் தொடர்ந்து உங்கள் இடங்களில் இருந்து வாழுங்கள் என்று நாங்கள் கூறும் போது நாங்கள் நாட்டைத் துண்டாட எத்தனிக்கின்றோம் என்ற முடிவுக்கு நீங்கள் வந்தீர்கள்? பெரும்பான்மையினராகிய நீங்கள் நாம் வாழும் இடங்களை சிங்களமயமாக்கலாம் என்ற உங்கள் நப்பாசையா இவ்வாறான குழந்தைத்தனமான அபிப்பிராயங்களை வெளியிட வைத்தது?

7. நாங்கள் எவரும் நாட்டைத் துண்டு போடக் கேட்கவில்லை. ஏற்கனவே துண்டு துண்டாக இருக்கும் இடங்களின் தன்மைக்கேற்ப, வரலாற்றுக்கு ஏற்ப, தனித்தன்மைக்கேற்ப, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுமிடங்களில் அவர்கள் தம்மைத் தாமே ஆளவே நாங்கள் கேட்கின்றோம். அது தவறா? ஒரே நாட்டினுள் நாம் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் நாங்கள் எம்மை நாமே ஆள உரித்தில்லை என்றால் உங்கள் சிங்கள இராணுவத்தைக் கொண்டு எம்மை என்றென்றும் அடிமைகளாக வாழவைக்க வழி தேடுகின்றீர்களா?

இவ்வாறான பிழையான கருத்துக்களை சிங்கள அரசியல்வாதிகள் கூறி வந்தமையால்தான் சிங்கள மக்கள் உண்மை அறியாது தமிழர்கள் மீது வன்மமும், குரோதமும், வெறுப்பும் கொண்டார்கள். தொடர்ந்து சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற இவ்வாறான சில்லறைக் கருத்துக்களைக் கூறி நாட்டின் சகோதர இனங்களிடையே மீண்டும் கலவரங்கள் வராமல் பிரதமர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிரதமரின் சகோதரர் ஒருவரின் வீடு பிரதமர் வீட்டிற்கு அருகாமையில் பாரம்பரிய தந்தை வழிக் காணியில் இருந்தால் 'இது எனது தந்தை வழிக்காணி! என் சகோதரரின் படுக்கை அறைக்குள் எந்த நேரமும் நான் போகலாம்' என்று அவர் வாதிட முடியுமா? சகோதரர் அனுமதி அளித்தால்த்தான் அவர் அங்கு செல்லலாம். அதே போல் பாரம்பரியமாக தமிழ் மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கினுள் - சிங்களவர்கள் எந்தக் காலத்திலும் பெரும்பான்மையாக வாழாத வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் - சிங்கள மக்கள் குடிகொள்ளவும் வணிகத்தலங்களை ஏற்படுத்தவும் இராணுவத்தினரைத் தொடர்ந்து வைத்திருக்கவும் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களிடம் அனுமதிபெற வேண்டும். அப்படி இல்லை என்றால் இந்த நாட்டின் ஜனநாயகம் சிங்களவரால், சிங்களவருக்கு, சிங்களவர் நடத்தும் அரசாங்கம் என்று பொருள் பட்டுவிடும். - என்று உள்ளது.



## மட்டக்களப்பு ஆயரை இன்று சந்தித்தார் யோகேஸ்வரன்

மட்டக்களப்பு, ஜூன் 26

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வேட்பாளராகக் களமிறங்கியுள்ள மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் மட்டக்களப்பு மாவட்டத்தின் மறை மாவட்ட ஆயர் கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகையை மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் சந்தித்தார்.

## யாழ். இந்துக் கல்லூரியில் இன்று தொற்று நீக்கும் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விசேட அதிரடிப்படையினரால் தொற்றுநீக்கி மருந்து விசுறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் பாடசாலை வளாகத்தில் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் மூன்றாவது நாளாக இன்று முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம்பிரதேசசெயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில்சிறப்புஅதிரடிப்படையினரால் இந்தப்பணி யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்வரும் 29ஆம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமைக்குத் திரும்பவேண்டும்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு கடந்த புதன்கிழமை தொடக்கம் நாளை சனிக்கிழமை வரை பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் ஒருங்கிணைப்பில் சிறப்பு அதிரடிப்படையினரால்கிருமித்தொற்று நீக்கி விசிறும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.



## நாளை முதல் மீண்டும் தியேட்டர்களில் படம்

கொழும்பு, ஜூன் 26

நாட்டின் அனைத்து திரையரங்குகளும் நாளை திறக்கப்படவுள்ளன என கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று நெருக்கடி காரணமாக மூடப்பட்டிருந்த திரையரங்குகள் சுமார் 105 நாள்களின் பின்னர் நாளை திறக்கப்படவுள்ளன.

சுகாதார அறிவுறுத்தல்களின் பிரகாரம் திரையரங்குகளை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, கலாச்சார அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச விருது வழங்கும் விழா மற்றும் கண்காண்காட்சிகளை இந்த வருடத்தில் வழமை போன்றுநடத்துமாறு கலாசார அமைச்சு, உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இதற்கான திட்டங்கள் கலாசார அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகள் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.06.2020 இல் வெளியிடப்பெற்றது.